அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

# TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

# ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் III.] MARCH, 1903–௲௯௱௩ மார்ச்சு. [இலக்கம். 1.

## உயிர்களைக் காப்பதே பெரிய தருமம்.

ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர்வரையில் உயிர்கள் ஐந்து விதமாயிருக்கின்றன: புல், மரம் முதலானவை பரிசத்தைமாத்திரம் அறிகிற ஓரறிவுயிராம்; சிப்பி, சங்கு முதலானவை பரிசத்தோடு சுவையையும் உணர்கிற ஈரறிவுயிராம்; எறும்பு, கறையான் முதலானவை அவ்விரண்டுடனே நாற்றத்தையும் அறிகிற மூவறிவுயிர்கள்; தும்பி, வண்டு முதலானவை உருவத்தையுமறிகிற நாலறிவுயிர்கள்; மிருகம், பறவை, மனிதர் முதலானவை அந்த நான்குடன் ஓசையையு முணர்கிற ஐயறிவுயிர்களாம். இப்படி ஐந்துவிதமான ஜீவன்களில் யாதொன்றையும் நாம் மறந்தாயினும் ஒருபோதும் துன்பப்படுத்தலாகாது. ஜீவவதை செய்வதனாலுண்டாகும் பாவம் மற்றக்காரணங்களால் உண்டாகும் பாதகங்கள் பலவற்றினும் மிகக் கொடியதாம். கொல்லாமையென்கிற தருமமொன்றே மற்றத் தருமங்களாலுண்டாகும் பயன்களெல்லாவற்றையும் தருமென்று நீதிநூல் சொல்லுகின்றது.

கொல்லாமைக்குப் பிற்பட்டதான இரண்டாவது தருமம் பொய் பேசாமையாம்; அதாவது, கண்டதை யில்லையென்று மறுத்துச்சொல்லாமல் உள்ளதை யுள்ளபடி உரைத்தலாம்.

ஆதலால் ஜீவவதைசெய்வதும் பொய்பேசுவதும் கொடிய பாவங்களென்று அறிந்து, அற்பமான எறும்பு முதலாகிய சிறிய பிராணிகளையும் இம்சிக்காமல் ஆதரிக்கவேண்டும். கடவுள் படைத்த ஜீவன்கள் எல்லாவற்றையும் அன்புடனே ஆதரிப்பது மனிதருடைய முக்கியமான பொறுப்பாயிருக்கிறது. மனிதருக்கு எப்படியோ அப்படியே மற்ற எல்லாவுயிர்களுக்கும் கடவுளே ரக்ஷகராம். என் மாடு, என் கன்று, என் குதிரை, என் நாய் என்று நாம் சொல்லுகிறோமே; இந்தச் சுதந்திரம் நமக்கு எங்கிருந்து வந்தது? அந்த உரிமையுடைய சொந்தக்காரர் சிருஷ்டி கர்த்தா ஒருவரே யன்றோ? கடைசியில் நாம் அவருக்கு உத்தரவாதம்பண்ணவேண்டியது அவசியமென்பதை நினைத்து நாம் ஒரு பிராணியையும் வருத்தப்படுத்தாமல் காப்பாற்றவேண்டியது நமது கடமை. ஏனென்றால், அவைகள் வருந்திக் குறைகூறி முறையிட்டுக்கொண்டால், அவர் காதுகொடுத்துக் கேட்க வல்லவர்; 'அகதிக்கு ஆகாயமே துணை' ஆகையால், நாம் அவைகளை நோவப்பண்ணால் நாம் அவர் தண்டனைக்குப் பாத்திரராவோம். நமக்கு அவை வாயில்லாதவையாகக் காணப்பட்டாலும், அந்த அநாதரக்ஷகருக்கு அவைகள் பேச்சற்ற ஊமைகளல்லவென்பதை நம்பி நாமொழுகவேண்டும். கொடுமையற்றவன் கடுமை [அநீதி] யற்றவன்.

## வாயில்லா ஜந்துக்களிடத்தில் அன்பு.

வாயில்லா ஜந்துக்களிடத்தில் நாம் ஒருபொழுதும் கொடியவர்களாயிருக்கலாகாது. பிள்ளைகளே, பேசுந் திறமையில்லாத பேதைப் பிராணிகளிடத்தில் கொடுமை செய்வது, கையிலாகாதவனும்

ஆண்மையில்லாதவனும் செய்யும் செய்கையாம். சிறு பிள்ளைகளிடத்தில் அதிகமான பக்ஷமுள்ளவளும் அவர்களுடைய குணாகுணங்களை நன்றாய் அறிந்தவளுமான ஒரு பெருமாட்டி, மிகப் பெருந்தன்மையுடையவனான ஒரு சிறுவனைப்பற்றிப் பேசும்பொழுது, அவனிடமுள்ள பல நற்குணங்களில் ஜீவகாருணியத்தையே முக்கியமான சிறந்த குணமாகச் சொல்லுகிறாள். எனென்றால், பேசத் திறமையில்லாத எளிய ஜந்துக்களிடத்திலே சிறு பிராயத்தில் அன்புள்ளவர்களாயிருக்கிற சிறுவர்களே வரவர ஆண்மையும் உதாரகுணமும் தைரியமுமுள்ள பெரிய மனிதராகிறார்களென்று அவள் நன்றாகக் கண்டறிந்திருக்கிறாள்.

பெண்கள் இவ்விஷயத்தைப் பின்னும் அதிகமாகக் கவனிக்கவேண்டும். சிறு குழந்தைகளாகட்டும், பூனைக்குட்டி முதலான சிறு ஜந்துக்களாகட்டும், அவைகள் விஷயத்தில் சிறு பெண்கள் அன்பு பாராட்டாம விருப்பார்களானால், அப்படிப்பட்ட பெண்கள்மிகவும் இகழத்தக்கவராவார்கள். எனென்றால், சிறு குழந்தைகளை வைத்துக்கொண்டு அநேகமாய் அந்த ஸ்திரீகளே ஆதரிக்கவேண்டி யிருக்கிறது; குழந்தைகள் தமக்கு ஒரு விளையாட்டாக எளிய பிராணிகளை இம்சிக்கத் தலைப்படுவது இயற்கையாதலால், அக்குழந்தைகள் அப்படிச் செய்யாதபடி அவர்களுக்குக் கற்பிக்கவேண்டியது பெண்களுடைய கடமையாகுமல்லவா?

வாயில்லா ஜந்துக்களிடத்தில் நாமேன் அன்புள்ளவர்களா யிருக்கவேண்டு மென்பதைப்பற்றி முதலில் சற்று ஆலோசித்துப் பார்ப்போம். முதலில் அவைகளுக்குப் பேச வாயில்லையன்றோ? யாராயினு மொருவர் துன்பப்படுத்தினால், ஐயோ பாபம், அதைப் பிறரிடம் சொல்லிக்கொள்ள அவைகளுக்குத் திறமையில்லையே. நாம் எவ்வளவு இம்சித்தாலும் அதை அந்த ஜந்துக்கள் ஒருவரோடும் சொல்லிக்கொள்ளா தென்கிற காரணத்தினாலேயே அவற்றை நாம் துன்பப்படுத்தத் தலைப்படுவது மிகவும் இழிவானகாரியமல்லவா? மேலும் அவை நம்முடைய ஜீவனத்திற்கும் சவுக்கியத்திற்கும் எவ்வளவு சகாயமாயிருக்கின்றன, யோசித்துப் பாருங்கள். அதற்குத் தகுந்த பிரதியுபகாரம் செய்யவேண்டுவது நமது கடமையன்றோ?

ஆடுமாடுகள், குதிரை, கழுதை முதலான பிராணிகளில்லாவிட்டால் நமக்கு என்ன காரியம் முடியும்? பற்பல விதமான பக்ஷிகள் தோட்டங்களிலும், வனங்களிலும் வினோதமாகப் பாடி நமக்கு ஆநந்தம் விளைவிக்கின்றனவல்லவா? நம்மைப் போலவே அந்தப் பிராணிகளுக்கும் இன்பமும் துன்பமு முண்டல்லவா? அவைகள் கஷ்டப்படாமல் சுகமாயிருக்கும்படி அவைகளை வைத்துக் காப்பாற்ற வழி தெரியாதவர்கள் அந்தப் பிராணிகளை ஒருபொழுதும் வைத்து வளர்க்கலாகாது. நமக்கு உபயோகமான பற்பல பிராணிகளுடைய இயற்கையையும், விருப்பங்களையும், உணர்ச்சிகளையும் நாம் நன்றாகத் தெரிந்துகொள்வோமானால் அவற்றை நாம் செவ்வையாகப் பரிபாலிக்கலாம்.

வாயில்லாத ஜீவன்களும் நம்மைப்போலவே கடவுளுடைய படைப்பே யாதலால், ஈசுவர சிருஷ்டியான ஜீவன்களை இம்சிப்பது மிகக் கொடுமையும் இழிவுமான காரியமாம். மனிதராகட்டும், மிருகமாகட்டும், யாவருக்கும் நோவென்பது ஒன்றுதானே! அப்படியிருக்க, தமக்கு நேரிடும் துன்பங்களைப் பிறரிடம் சொல்லிக்கொள்ளவும், அதற்குப் பிரதி செய்யவும், அதற்குப் பரிகாரந் தேடவும், திறமையில்லாத எழை ஜந்துக்களை ஒருவன் இம்சிக்கத் தொடங்குவானானால், அவனை மிருகங்களிலும் கேடுகெட்ட கொடிய மிருகமென்றே சொல்லவேண்டும்.

## கஷ்டகாலத்தில் குதிரைகளுக்கு உதவி செய்தல்.

சில வருஷங்களுக்கு முன் மேலான குலத்தில் பிறந்தவனும் சிறந்த பண்டிதனுமான ஒரு பிரபு தன் நண்பர்களைக் காணும்பொருட்டு வீதிவழியே போய்க்கொண்டிருந்தான். அந்த வழியில் ஒரு எழை மனிதன் ஒரு மெலிந்த குதிரையைக் கட்டி வண்டியோட்டிக்கொண்டு போனான். அந்த வண்டியிலிருந்த சுமையை அக்குதிரை யிழுக்க முடியாமல் அங்கே படுத்துக்கொண்டது. அதைப் பார்த்த அந்தப் பிரபு திடீரென்று அவ்விடத்திற்குப் போய் மிகவும் பளபளப்பான தன் சட்டையைக் கழற்றிக் கீழே வைத்துவிட்டு, வண்டியிலிருந்த சில மூட்டைகளைக் கீழேயிறக்கிக் குதிரையை யெழுந்திருக்கச் செய்து உற்சாகப்படுத்தி, மூட்டையை மறுபடியும் வண்டியிலேற்றி ஓட்டிக்கொண்டு போகச் செய்தான். அவன் தன் பெருந்தன்மையையாயினும், உடம்பு அழுக்காவதையாயினும், காலதாமதப் படுவதையாயினும் சற்றும் ஆலோசியாமல் ஜீவகாருணியத்தையே பெரிதாகப் பார்த்தான். அவ்விதமான சரீரப் பிரயாசமான வேலை அவன் ஒருபோதும் செய்தவனல்ல னாகையால், சற்று இளைப்படைந்திருப்பான். அவ்வளவோடு நிற்காமல் அவன் அந்த எழை மனிதன் கையில் கொஞ்சம் பணம் கொடுத்து, எதாவது வாங்கித் தின்று குதிரைக்கும் எதாவது தீனி வாங்கிக் கொடுத்து இளைப்பாற்றிக் கொள்ளும்படி சொன்னதுமன்றி, உன்னிடத்தில் உனக்கு விசுவாசமிருந்தால், நீ உன்னுடைய குதிரையினிடத்தில் அதிகமான அன்புள்ளவனாயிருக்க வேண்டுமென்று புத்திசொல்லி யனுப்பினான்.

பிறகு அந்தப் பிரபு தன் நண்பர்களிடம் சென்றபோது, அவர்கள் பிரபுவினுடைய உடுப்பு நலங்கி யழுக்காகி யிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு,

இதென்ன? எனிப்படிப்பட்ட அழுக்கு உடுப்பைப் போட்டுக்கொண்டு வந்தீர் என்று கேட்டார்கள். நடந்த சங்கதியை அவன் சொன்னபொழுது அவர்களில் அற்ப புத்தியுடையவர்களான சிலர், இது உம்மைப்போன்ற பெரிய பிரபு செய்யத்தகுந்த வேலையோவென்று இகழ்ச்சியாகப் பேசினார்கள். அவர்களுக்கு அவன் சொன்ன மறுமொழியாவது: இப்பொழுது நான் செய்த பரோபகாரமான செய்கையை நான் நினைக்க நினைக்க எனக்கு இராத்திரியெல்லாம் பேரானந்தமாயிருச்குமே! நான் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்து அவர்களுக்கு நன்மையுண்டாக்கும்படி கடவுளைப் பிரார்த்திப்பது மாத்திரமேயன்றி, என்னால் கூடியவளவு அவர்களுக்கு உதவி செய்வதும் எனது கடமையென்று நான் உறுதியாக எண்ணியிருக்கிறேன் என்று சொன்னான். இப்படித் தனக்குள்ள ஜீவகாருணியத்தை வெளியிட்டுப் பரோபகாரஞ் செய்யும்படியான தருணம் தனக்கு வாய்க்கும்படி செய்ததற்காகக் கடவுளை அவன் அதிகமாகப் போற்றி வணங்கினான். ஜீவகாருணியமென்றால் இப்படியல்லவோ யிருக்கவேண்டும்?

## உபாத்தியாயர்களுக்காகும் சில விஷயங்கள்.

சிறுபிள்ளைகள் நல்ல ஆலோசனைத்திறமையும், அன்பும் உடையவர்களாவதற்கு உதவியாகிற ஒவ்வொன்றும், பாடசாலைகளும் வீடுகளும் நாடுகளும் சீர்ப்படுவதற்கு உதவியாகிறது. அன்புடைமையென்பது கையிலாகாமைக்கு அடையாளமென்று சிலர் நினைப்பார்கள். அப்படி ஒருபொழுதும் எண்ணலாகாது; பலிஷ்டர்களாயிருக்கின்ற பலர் எளியவர்களிடத்தில் அதிகமான அன்புடையவர்களாகவே யிருக்கக் கண்டிருக்கிறோம். மேன்மைபெற்றவர்களென்று சொல்லப்பட்டவர்கள் சில வேளைகளில் கொடியவர்களாயிருக்கிறார்களென்பது வாஸ்தவமே; அப்படிக்கொடியவர்களா யிருப்பவர்கள் ஒருபொழுதும் உண்மையான மேலோர் ஆகமாட்டார்கள். மேலோரென்று அவர்கள் பெற்ற புகழ் அவர்களுடைய கொடுந்தன்மையால் நாளளவிலே சீர்குலைந்து போகும். ஆகையால், எளியவைகளைப் பாதுகாக்கும்படி பிள்ளைகளுக்கு நன்றாகக் கற்பிப்பதற்குப் பெருந்தன்மை ஒருபோதும் தடையாகமாட்டாது. உயர்ந்த பெருந்தன்மையுடையவனான ஒரு சிறுவன், நாயோ பூனையோ, எளிய ஜந்துக்கள் எதைப்பார்த்தாலும் அதனிடத்தில் அதிகமான நேசம் பாராட்டினான். அவன் மிகச் சிறுபையனா யிருந்தபொழுது, அநாதையான ஒரு பூனையைப் பிடித்து வருத்தின பெரிய பிள்ளைகளுடனே பிரபலமாகப் போராடி அதை விடுவித்துக் காப்பாற்றினான்.

---

பிள்ளைகளுக்குக் கல்விப்பயிற்சி செய்விக்கும்பொழுது, பலவிதமான பிராணிகளுடனும் அப்பிள்ளைகள் பழகும்படி செய்து அவர்களுக்கு ஜீவகாருணியத்தைக் கற்பிப்பது மிகவும் அவசியமானதென்பதைப்பற்றி ஒருவர் ஒரு பத்திரிகையில் சொல்லியிருப்பதாவது: — பிள்ளைகளைப் பற்பல பிராணிகளுடனும் பழகும்படி செய்து அவர்களுடைய புத்தியில் நியாயத்தின் மூலாதாரங்களிவையென்பதை விளக்காமல் உபேக்ஷிப்போமானால், அவர்களுக்கு அன்பையும் அருளையும் போதிக்கவேண்டிய நல்ல தருணத்தை நாம் இழந்தவர்களாவோம். பிள்ளைகளுக்கு இவ்விஷயங்களைப்போதிக்கவேண்டுமென்கிற உண்மை உபாத்தியாயர்கள் ஒவ்வொருவருக்குமே தெரிந்துதானிருக்கிறது. தெரிந்துகொண்டிருப்பதனாலேயே பயன் விளையுமோ? கற்றுக்கொள்ள வேண்டிய வழியைச் சிறுவர்களுக்குத் தெரிவித்துவிட்டால், அதிக ஆவலுடனே அவர்கள் அதையறிந்து அந்த வழியே நடக்க முயல்வார்கள். இம்சித்து உபத்திரவப்படுத்துகிற காரியம் அவர்களுக்கு எப்படி வெகு சுலபமாகத் தெரிகிறதோ, அதைப்போலவே, பூததயை பச்சாத்தாபங்களுடனே பரோபகாரஞ் செய்கிற நற்குணமும், நாம் கற்பிப்போமானால் வெகுசீக்கிரமே அவர்களுக்குப் பழக்கமாகி விடுமென்றோ? என்பதாம்.

---

காட்டுமிருகங்களாயினும் பிடித்துப் பழக்கிய சாதுவான மிருகங்களாயினும், அவைகளை வைத்து வளர்க்கும் மிருகாசயங்களுக்கும், அவைகளைக் கொண்டுவிநோதங்கள் செய்விக்கிற ஆட்டங்களுக்கும், பலபொருட் காட்சி சாலைகளுக்கும் பிள்ளைகள் போய் அங்குள்ள விநோதங்களைப் பார்க்கவேண்டியிருந்தால், முதலில் அந்தப் பிள்ளைகள் பிராணிகள் விஷயத்தில் அன்பும் அபிமானமும் நெஞ்சுருக்கமு முள்ளவர்களா யிருக்கிறார்களாவென்பதை உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இல்லாவிட்டால், மிருகாசயங்களுக்கும் பலபொருட் காட்சி சாலைகளுக்கும் போகும் பிள்ளைகள் அங்குள்ள மிருகங்களைக் கல் எறிவது முதலிய கொடுமை செய்யத் தலைப்படுவார்கள்; மிருகங்களின் ஆட்டத்தைப் பார்க்கப் போனவர்கள் தாமும் அப்படியே தம் கையி லகப்படும் எளிய மிருகங்களைப் பலவாறு வருத்தப்படுத்தத் தலைப்படுவார்கள். இவ்விதமாகவே ஒரு சிறுவன் தான் மிருகங்களின் ஆட்டத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தபிறகு, நாள் முழுதும் உழைத்து இளைப்படைந்த ஒரு குதிரையைப் பிடித்து அதன்மேல் ஜீனிகூடப் போடாமல் ஏறிக்கொண்டு குதிகால்களால் அதை இடித்தோட்டிப் பந்தயம்விடத் தொடங்கினான். ஆகையால் ஜீவகாருணிய மில்லாத பிள்ளைகளை

அவ்விதமான இடங்களுக்குப் போய்ப் பார்க்கும்படி பெற்றோர்கள் ஒருபோதும் ஸம்மதிக்கலாகாது.

---

ஒருசமயத்தில் சில சிறுவர்கள் ஒரு பூனைக்குட்டியைப் பிடித்து இம்சித்துக்கொண்டிருந்தார்கள். தன் வீட்டுச்சாளரத்தின் வழியாக அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெருமாட்டி பரிதாபப்பட்டு உடனே போய் அந்தப் பூனைக்குட்டியை அவர்களிடத்திலிருந்து தான் பிடித்துக்கொண்டு வந்து காப்பாற்றினாள். அதன்பிறகு அவள் இரண்டொரு வாரம் கழித்து, முன் அதைத் துன்பப்படுத்தின சிறு பிள்ளைகளுக்கு அந்தக் குட்டியைச் காட்டவேண்டுமென்று அவர்களை வரவழைத்துத் தகுந்தபடி உபசரித்து, 'இப்பொழுது இந்தப் பூனைக்குட்டி யெப்படியிருக்கிறது பாருங்கள்' என்றாள். அது நன்றாக வளர்க்கப்பட்டுப் புஷ்டியடைந்து அதிக சுறுசுறுப்பு உடையதாயிருந்தது. அதைப் பார்த்தவுடனே அந்தப் பிள்ளைகள் ஸந்தோஷப்பட்டுத் துர்ப்புத்திமாறி, முன்பு எவ்வளவு கொடுமையுள்ளவர்களா யிருந்தார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அன்பும் ஜீவகாருணியமு முடையவர்களானார்கள். இவ்விதமாக நடத்திக்காட்டிய ஒரு நல்ல சிறு திருஷ்டாந்தமானது அச்சிறுவர்களுடைய துர்க்குணத்தை முற்றும் மாற்றி அவர்களை நல்வழிப்படுத்திவிட்டதென்றால், நற்புத்தி போதிப்பதற்கு வாய்க்கும் இப்படிப்பட்ட நல்ல தருணங்களை உபாத்தியாயர்கள் கைவிடலாகுமோ?

---

உவாஷிங்டன் பட்டணத்தில் ஒரு பாடசாலையில் படித்துவந்த ஒரு சிறுவன் ஒருவருக்கும் அடங்காதவனாகி உபாத்தியாயருக்கும் அதிகமான வருத்தத்தை விளைவித்துவந்தான். அதுகண்டு அவனை நல்வழிப்படுத்தும் உபாயத்தைக்கண்டறிந்துபிறகு இரண்டொருவாரம் ஜந்துக்களுடைய சரித்திரத்தைப் படித்து வரும்படி செய்தார்கள். ஒன்றுக்கொன்று அன்புபாராட்டி வாழும் அற்ப ஜந்துக்களுடைய அழகான வாழ்க்கையைப் படித்தவுடனே அந்தச் சிறுவன், தன் உபாத்தியாயரிடத்தில் அடக்கமும் கீழ்ப்படிதலும், கூடப்படிப்பவர்களிடத்தில் பிரீதியும் உபகாரசிந்தையும் உடையவனாகி, நன்னடக்கைக்கு மேல்வரிச்சட்டமாக நடக்கலானான். ஜீவகாருணியத்தைச் சிறுவர்களுக்குக் கற்பிப்பதனால் விளையும் நன்மைகளையும், அது மிகவும் அவசியமானதென்பதையும் விளக்க இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்கள் அநேகமுண்டு. இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்கள் எத்தனை யகப்படுகின்றனவோ கண்டறியவேண்டுமென்று ஒரு பத்திராதிபர் பல வருஷங்களாகப் பாடுபட்டுவருகிறார்; இதுவரையிலும் அவர் கண்டறிந்தவைகள் தவிரவும் மேலும் மேலும் இன்னும் அநேகம் திருஷ்டாந்தங்கள் அகப்பட்டுக்கொண்டே யிருக்கின்றன.

## நாம் கையாளும் ஜந்துக்களிடத்தில் கருணைபுரிதல்.

உயரமா யேறும்படியான ஒரு வீதிவழியே நான் ஒருநாள் போய்க்கொண்டிருந்தேன். அங்கே ஒரு வீட்டு வாயிலில் ஒரு வைத்தியருடைய வண்டி நின்றுகொண்டிருந்தது. அந்த வண்டிச் சக்கரம் தானே உருண்டுபோகும்படி அந்த வீதி பின்புறத்தில் சரிவாயிருந்ததனால், அந்த வண்டிச் சக்கரம் அப்படிச் சறுக்கிப்போகாமல் வண்டியைக் குதிரை யிழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தது. நான் சற்றுநேரம் அதை நின்று பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஏனென்றால், கண்ணெதிரில் காணப்படுவது எதானாலும் அதை அவசரமில்லாமல் நிதானித்துப் பார்க்கவேண்டுமென்பது எனது துணிபு. அப்படி நான் பார்த்துக்கொண்டிருக்கையில் அந்த வண்டிக்குதிரை இரண்டு மூன்றுதடவை அந்தச் சுமையை யிழுத்துப்பிடிக்க முடியாமல் தத்தளித்தது; வண்டி பின்னால் உருள ஆரம்பித்தது; குதிரை மறுபடியும் நிலைகொண்டு வண்டியை யிழுத்துப் பிடித்தது. நான் அந்தப் பிராணியின் வருத்தத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்டு என்னால் எடுக்கக் கூடிய இரண்டு பெரிய கற்களையெடுத்து வண்டிச் சக்கரங்களின் பின்னால் வைத்து அதை உருளாதபடி செய்துவிட்டு அப்புறம் போய்விட்டேன்.

போகும்போது நான் பக்கத்துவீட்டில் சற்று நின்று அங்கிருந்த ஒரு சிறுவனிடத்தில் இந்தச் செய்தியை யெடுத்துச் சொன்னேன். அதற்கு அந்தச் சிறுவன் சொன்ன மறுமொழியாவது:— 'வண்டி பின்னால் சறுக்கிப்போகாதபடி அதைச் சரிப்படுத்திவிட்டுப் போவதற்குள் நோயாளியினிடம் வைத்தியர் வெகு சீக்கிரமாகப் போகவேண்டிய காரியமிருக்கும், அதனாலேதான் அவர் அப்படி வண்டியை விட்டுப் போனார்' என்று சொன்னான். அதைக் கேட்டு நான், 'ஆம், நீ சொல்வது மெய்தான், இக்குதிரையில்லாவிட்டால் வைத்தியர் நோயாளியினிடம் வந்துசேரவே வழியிருக்கமாட்டாதல்லவா? இதை அவர் முக்கியமாக நினைத்துப் பார்க்கவேண்டுமன்றோ? அவர் குதிரைக்காக மற்றொன்றும் கஷ்டப்பட வேண்டுவதில்லையே; அது நின்றுகொண்டிருக்கும்பொழுது வருத்தப்படாமல் சுகமாக நிற்பதற்குவேண்டிய உபாயத்தைத் தேடிவிட்டால் அதுவே அதனிடம் அவருக்குள்ள கருணையைக் காட்டியதாகுமே, என்று சொன்னேனென்கிறான்.

## புத்தி கூர்மையுள்ள குதிரை.

அநேகமாய்க் குதிரைகள் மிகுந்த புத்தி கூர்மையுடையவை யென்பது பலபேருக்குத் தெரிந்திருக்கலாம். குதிரையினது அறிவு அடியில் வரு

கிற சிறு கதையினால் மிகவும் நன்றாக விளங்கும். மேனாட்டில் ஒரு சீமாட்டி பிரதிதினம் தன் குதிரைமேலேறிக்கொண்டு சிறிது தூரம் சவாரி செய்துவருவது வழக்கம். அப்படியிருக்க, அவள் ஒரு நாள் வழக்கப்படி சவாரி போகும்பொழுது ஒரு இடத்தில் அந்தக் குதிரை அப்பால் ஒரு அடி கூட எடுத்து வைக்காமல் திடீரென்று நின்றுவிட்டது. அது கண்டு அந்தச் சீமாட்டி அப்புறம் போகும்படி குதிரையை எவ்வளவோ நிர்ப்பந்தப்படுத்தித் தூண்டினாள், அது சற்றும் நகரவில்லை. இதென்னவென்று அவள் கீழே குனிந்து பார்த்தாள்; குதிரைச் சேணத்தில் அவள் கட்டிவைத்திருந்த ஒரு சிறு பெட்டி கீழே வீழ்ந்துபோயிருந்தது. அந்தப் பெட்டி பாதையில் வீழ்ந்துபோன செய்தி புத்திகூர்மையுள்ள அக்குதிரைக்குத் தெரிந்தது. வாயில்லாத அந்தப் பேதைப் பிராணி யஜமானி பெட்டியை யிழந்துபோன செய்தியை அவளுக்குத் தெரிவிக்கிற விதமெப்படி? அப்புறம் அசையாமல் பெட்டி வீழ்ந்தவிடத்தில் நிற்பதொன்றுதானே அது செய்யக்கூடிய காரியம். அதனால் அவள் பெட்டி வீழ்ந்துபோனதைத் தெரிந்து எடுத்துக்கொள்ளுகிறவரையில் அது அவ்விடத்திலேயே நிலையாக நின்றது. இப்படிப்பட்ட உபகாரிகளான எளிய ஜீவன்களை அநாதரவு செய்வதும் துன்பப்படுத்துவதும் புத்தியீனமான காரியமன்றோ?

## குதிரைகள் எத்தனை வருஷகாலம் ஜீவித்திருந்து உழைக்கும்?

குதிரைகளைச் செம்மையாகப் போஷித்து வளர்த்தால், அவை இருபது வருஷங்களுக்கு அதிகம் ஜீவித்திருக்கும்; செவ்வையாகப் போஷிக்காமல் அநாதரவு செய்வதனால் அநேகம் குதிரைகள் அதிசீக்கிரமே உடல் மெலிந்து, தளர்ந்து உபயோகமற்றுப் போகின்றன. மேற்கே காரன்வால் என்னும் நாட்டில் ஜீவகாருணியமுள்ள ஒரு பெருமாட்டி ஒரு குதிரை வைத்திருக்கிறாள். அதற்கு வயது இருபத்து மூன்றாகியும், இன்னும் அது இளம்பிராயமான குதிரைகளுடனே ஒரு வண்டியில் கட்டி ஓட்டப்பட்டு, மலைமேடான பாதைகளில் பத்துமைல் தூரமான பட்டணத்திற்குச் சற்றேனும் இளைப்படையாமல் போய்வரும்படியான சக்தியுடையதாயிருக்கின்றது.

இதே பெருமாட்டி இதற்குமுன் ஒரு குதிரை வைத்திருந்தாள். இறக்கும்பொழுது அதற்கு வயது முப்பத்துமூன்று. இறந்துபோவதற்கு ஒரு வருஷம் முன்வரையிலும் அது உழைக்கச் சக்தியுள்ளதாயிருந்தது. இறப்பதற்குச் சில மாதங்கள் முன்புதான் அதை வண்டியில் கட்டுவதை நிறுத்தி, சவுக்கியமான கொட்டாரத்திலும் பசும் புல்தரையிலும் விநோதமாயிருந்து காலங்கழிக்க விட்டார்கள். பிறகு அதிகமான வருத்தமில்லாமல் சுகமாகவே அதன் வாழ்நாள் முடிவுபெற்றது.

## சாமர்த்தியமுள்ள சிறந்த நாய் சொன்ன சிறு கதை.

என்னுடைய யஜமானன் ஒருநாள் கடலோரத்தில் வந்திருந்த ஒரு கப்பலைப் பார்க்கப் போனான். நான் பின்னே தொடர்ந்துவருவதைப் பாராமல் அவன் கடலோரம் சேர்ந்தவுடனே ஒரு படகிலேறிக்கொண்டான். நான் இன்னது செய்வதென்று தோன்றாமல் கரையோரத்தில் தவித்துக்கொண்டிருக்க, படகோட்டிகள் சீக்கிரமே படகைத் தள்ளிக்கொண்டு போகலானார்கள். என் யஜமானனை அவர்கள் கொண்டுபோவதை நான் பார்த்தேன்; ஆனால் அவன் இன்னவிடம் போகிறானென்று எனக்குத் தெரியவில்லை. அதனால் நான் உறுமிக் குரைத்தேன்; கரையோரத்தில் இங்குமங்கும் ஓடினேன். வரவர யஜமானனேறிய படகு அதிக தூரம் போய்விட்டதனால், நான் குரைத்தது அவர்களுக்குக் கேட்கவில்லைபோலும். என் யஜமானன் தானே தண்டு வலித்துச் செல்வானானால், அவன் தன் காரியமாகவே செல்வதாக நினைக்கக்கூடும்; அவன் அசையாது உட்கார்ந்திருக்க, வேறு மனிதர் தண்டு வலித்துக் கொண்டுபோனதனால், அந்த மனிதர்கள் இவனை யெவ்விடத்திற்கோ கொண்டுபோகிறார்களென்று நான் நினைக்கவேண்டியதாயிற்று.

அதனால் நான் கரையில் தனியே நிற்க மனம் வராமல் உடனே தண்ணீரில் குதித்துப் படகின் பின்னே நீந்திக்கொண்டு போனேன். மிகவும் அதிகமாகப் பிரயாசைப்பட்டு நான் வெகுதூரம் நீந்திக்கொண்டு போனேன்; நான் பின் தொடர்ந்து வருவதை வெகுநேரம்வரையில் ஒருவரும் பார்க்கவில்லை. கடைசியாக நான் மிகவும் களைப்படைந்து சோர்ந்துபோகிற தருணத்தில் படகிலிருந்த ஒருவன், தண்ணீரில் என் தலை மூழ்கி மூழ்கிக் கிளம்புவதைக் கண்டு என்னை எனது யஜமானனுக்குக் காண்பித்தான். என்னைத் திரும்பிப்பார்த்தவுடனே என் யஜமானன், 'அதோ எனது நாய், அதோ எனது நாய்! என்று கூவி, உடனே, படகைத் திருப்புங்கள்! தீவிரமாகத் திருப்புங்கள்! பெரிய மீன்கள் என் நாயைப் பிடித்துக்கொள்வதற்குள்ளே நாம் அதைப் படகிலேற்றிக்கொள்வோம்' என்று சொன்னான். உடனே படகு என்னிடத்திற்குத் திரும்பி வந்தது. என்னை மெல்லப் பிடித்துத் தூக்கி என் யஜமானனது பாதத்தண்டையில் விட்டார்கள். யஜமானன் என்னைப் பலதரம் தட்டித் தடவிக்கொடுத்தான்; சந்தோஷமாக விழித்துப் பார்த்தான்; என் உயிருக்குத் துணிந்து நான் தண்ணீரில் குதித்து அவனைப்

பின்தொடர்ந்து வரும்படி அவ்வளவு அதிகமான அன்பு வைத்திருப்பதைக் கண்டு மிகவும் கொண்டாடியதாக அவனுடைய பார்வையால் எனக்கு நன்றாக விளங்கிற்று—என்று சொல்லிற்று. விசுவாசமென்றால் இப்படியல்லவோ இருக்கவேண்டும்? இப்படிப்பட்ட மிருகங்களைப் பார்த்துப் பழகினாலன்றி மனிதர்களுக்கு இவ்விதமான அன்பும் அபிமானமும் ஒருபோது முண்டாகாதென்று உறுதியாகச் சொல்லலாம்.

## ஊரெங்கும் சுத்திசெய்யும் உபயோகமான பிராணிகள்.

அசுத்தமாகவாயினும் அழிவு செய்வதாகவாயினும் உள்ள எதையும் இவ்வுலகவியற்கையானது தன்னிடம் சேர இடங்கொடாதபடி வெறுக்கிறது. இதற்கு ஒரு முக்கியமான திருஷ்டாந்தமென்னவென்றால், கெட்டு அழுகி விஷமுண்டாக்கும் பொருள்கள் இப்பூமியி லெங்கெங்கே காணப்படுகின்றனவோ, அங்கங்கே உடனே அவற்றை அப்புறப்படுத்தி யொழித்துச் சுத்திசெய்யும் பிராணிகள் ஏற்பட்டிருக்கின்றனவென்பதேயாம்.

உக்கிரமான யுத்தங்கள் நடந்தபிறகு அந்தப் போர்க்களத்தில் உயிரிழந்த உடல்கள் அப்படியே கிடந்தால், அக்கம்பக்கங்கள் என்ன கதியாகிவிடும்? மிகக் கொடியவையான கொள்ளை நோய்கள் உண்டாகிப் பெருந் துன்பம் விளையுமல்லவா? அப்படி உயிரற்று வீழ்ந்த உடல்கள் அழுகி அதனால் ஆசாயமெங்கும் துர்நாற்றம் பரவி மிகக் கொடிய வியாதிகள் உண்டாகாதபடி அவ்வுடல்களை ஒழித்துச் சுத்திசெய்வதற்கு இராசாளி, கழுகு, கழுதைக்குடத்தி, நரிமுதலான பிராணிகள் அநேகமாய் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பிராணிகள் இல்லாவிட்டால் உலகமெங்கும் இத்தன்மையதென்று சொல்லிமுடியாத மிகக் கொடிய அபாய முண்டாகிவிடுமே.

நாடுகளைச் சுத்திசெய்யும் இப்படிப்பட்ட பிராணிகளில் மிகச் சிறந்தது இராசாளி என்கிற பறவையாம். அது மிகவும் உபயோகமுள்ள அருமையான பறவை. இந்தப்பக்ஷி அகோரமான பசியுடையதா யிருக்கிறதென்பது ஒன்றுமாத்திரமேயன்று; வெகு நுட்பமான பார்வையு முடையது. அதனால் அதிக தூரத்திற் கப்பாலுள்ள மிகச் சிறியதான அழுகும் பிணத்தையும் நன்றாய்க் கண்டறிகின்றது; மிக நுட்பமான மோப்பமும் இது விஷயத்தில் அதற்குப் பெரிய உதவியாகிறது.

தென்கடலின் வடகரையிலே மகேந்திரமலை மீதிருந்த ஸம்பாதியென்கிற இந்த இராசாளியினத்தைச்சேர்ந்த பறவை இலங்காபுரியிலுள்ள சீதையைக் கண்ணால் கண்டு 'இதோ சீதை இலங்கையிலிருக்கிறாள்' என்று வானரர்களுக்குக் கூறியதாக இராமாயணத்தில் சொல்லியிருப்பதை அநேகர் கேட்டிருக்கலாமே. இந்தப் பறவைக்கு அதிக தூரம் கண் தெரியுமென்பதற்கு அதைவிட வேறு திருஷ்டாந்தம் வேண்டுமோ?

இந்தப் பறவைக்குப் பசி அகோரமாயிருப்பது இந்த விஷயத்திற்குப் பெரிய உதவியாகின்றது. ஏனென்றால், இது தீனி எவ்வளவு தின்றாலும் அத்தீனி உடனுக்குடனே ஜீரணமாகிவிடுவதால், மறுபடி அதிசீக்கிரத்தில் பசியெடுத்துப் பிணங்களுள்ளவிடம் தேடிப் பறந்தோடுகிறது. யுத்தபூமிகளில் மாத்திரமேயன்று, காடுகளிலும் நாடுகளிலும் ஆடுமாடு குதிரை கழுதை ஒட்டை முதலான பிராணிகள் எவை செத்துக்கிடந்தாலும் அவற்றின் வாசனையை மோப்பத்தால் அறிந்து, அதிசீக்கிரமே அவ்விடம் போய் அவைகளைத் தின்று அவ்விடத்தைச் சுத்தமாக்கிவிடுகிறது. குள்ளநரி, கோனாய், குடத்தி முதலான மிருகங்களும் இந்தப் பிணந்தின்னும் பக்ஷிகளுக்குப் பெரிய துணையாயிருக்கின்றன. நரி முதலான மிருகங்கள் பிணங்களைப் பிடித்துத் தின்னும்பொழுது கழுகு முதலான பக்ஷிகள் அஞ்சி அவற்றினருகே போகாமல் ஆகாயத்திலே கூட்டமாகப் பறந்து சூழ்ந்துகொண்டிருந்து, நரிமுதலியவை சற்றுப் பராக்காயிருக்கையில் இடையிடையே பிணத்தின் மேல் பாய்ந்து அதன் மாமிசத்தைக் குத்தி யெடுத்துக்கொண்டுபோய்த் தின்னும். இந்தக் காட்சி நேரில் பார்க்க வெகு விசித்திரமாயிருக்கும். இப்படி அவை பெருங்கூட்டமாக விருந்து உண்ணும்பொழுது நரிகள் ஆநந்தத்தால் ஆகாயத்தை நோக்கி ஊளையிடுவது வெகு விசித்திரமாயிருக்கும். அந்த மிருகங்களுக்கு வயிறு நிறைந்து போனால், அவை அந்தப் பிணத்தைப் பாதி அப்படியே விட்டுவிட்டுப் போய்ச் சற்றுப் பொறுத்து மறுபடி தின்னலாமென்று வரும். அப்படி வரும்பொழுது அங்கே எலும்புகள்தவிர மற்றொன்றும் காணப்படாது; அதற்குள் பறவைகள் எல்லாவற்றையும் சிறிதுகூட விடாமல் தின்று சுத்திசெய்துவிடும். நரிகள் அதை அவ்வளவோடு விடாமல் அந்த எலும்புகளையும் நன்றாய்க் கடித்து அதில் சிறிதளவும் பசையில்லாமல் நக்கித் தின்றுவிடும். இப்படி யிந்த மிருகங்களும் பறவைகளும் நாடுகளிலும் காடுகளிலுமுள்ள அழுக்குகள் எல்லாவற்றையும் உடனுக்குடனே தின்று சுத்தி செய்வதனால் தேசமெங்கும் சவுக்கியமாயும் வாஸயோக்கியமாயு மிருக்கின்றது.

இவைமாத்திரமே யல்ல, தேசங்களைச் சுத்திசெய்யக் கடவுள் இன்னும் அநேகம் ஜந்துக்களைப் படைத்திருக்கிறார். நமது வீட்டுத் தரையில் ஏதேனும் ஒரு சிறிய பூச்சி செத்துக்கிடந்தால், எறும்புகள் அநேகமாக உடனே வந்து அதைத் தம் பாழிக்குள் இழுத்துக்கொண்டு போவதைப் பலரும் பார்த்திருக்கிறார்களல்லவா? ஐரோப்பா முத

லான தேசங்களில் சில வண்டுகளிருக்கின்றன. எலி பெருச்சாளி முதலானவைகள் செத்துக்கிடப்பதைக் கண்டால், அந்த வண்டுகள் விடுவதில்லை; அவற்றை யிழுத்துக்கொண்டுபோய்க் குழிதோண்டிப் புதைத்து மேலே மண்போட்டு மூடிவிடுகின்றன. பெண் வண்டு அதன்மேல் முட்டையிடும். அம்முட்டைகளிலிருந்து உண்டாகும் புழுக்களெல்லாம் நைந்துபோன அப்பிணத்தைத் தின்று அதையும் சுத்தமாக்கிவிடுகின்றன. இப்படியே சுத்திசெய்யும் பிராணிகள் உலகத்தில் எவ்விடத்திலும் அநேகமாகக் கருணைக்கடலான கடவுளால் படைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமாக நிலத்தைச் சுத்திசெய்வதுபோலவே நீரைச் சுத்திசெய்யவும் அளவற்ற பிராணிகள் படைக்கப்பட்டிருக்கின்றன. எரி, குளம், கிணறு நதிமுதலான நீர்நிலைகளில் எவ்வளவு அழுக்குகள் சேருகின்றன; எத்தனை பிராணிகள் இறந்துபோகின்றன; இத்தேசத்தில் எத்தனை மனிதர்கள் தங்கள் உடம்பின் அழுக்கைத் தேய்த்துக் கழுவியும் அழுக்குத் துணிகளைத் தோய்த்தும் அசுத்தம் செய்கிறார்கள். அந்த அசுத்தங்கள் அத்தண்ணீரில் அப்படியே யிருந்தால், அது அதிசீக்கிரத்தில் அழுகி நாற்றமெடுத்துக் கெட்டுப்போகுமல்லவா? அப்படியில்லாமல் தண்ணீரில் விழுகிற அழுக்குக்களை உடனுக்குடனே தின்று சுத்தப்படுத்த மீன்முதலான ஜீவன்கள் எத்தனையோ தண்ணீரில் காத்திருக்கின்றனவன்றோ? மீனில்லாத தடாகங்களிலுள்ள தண்ணீர் கையால் தொடுவதற்கும் உபயோகமாகாது. நீர்வாழ் ஜந்துக்களுக்குத் தண்ணீரில் விழும் அழுக்குகளே உணவாகும்படி செய்து, தண்ணீர் என்றென்றைக்கும் சுத்தமாகவே யிருக்கும்படி கிருபைசெய்திருக்கிற கடவுளுடையகருணை இத்தன்மையதென்று வியக்க நம்மாலாகுமோ? அப்படிப்பட்ட ஜகதீசனுடைய சிருஷ்டியான ஜீவன்களிடத்தில் நாம் கருணையில்லாமல் கொடியவர்களா யிருப்பதைவிட மூடத்தனம் வேறுண்டோ?

## குதிரையினிடத்தில் அன்பில்லாத கொடியனுக்குச் செய்யவேண்டிய தண்டனை.

குதிரைகளிடத்தில் கருணையில்லாமல் கொடுமை செய்பவர்களுக்கு எவ்வளவு தண்டனை செய்தாலும் போதாது. மனிதனைப் பார்க்கிலும் குதிரை எத்தனையோ மடங்கு அதிகமான வலியுள்ளது. அப்படி யிருக்க, தனக்குத் தீமை செய்பவர் விஷயத்தில் தனக்குள்ள வலியை வெளியிட்டுப் பிரதியபகாரஞ் செய்யாமல் குதிரை சும்மா இருப்பது மிகவும் ஆச்சரியமே. ஆயினும், குதிரைகள் பொறுமையுள்ள சாதுவான ஜந்துக்களாகி யார் என்ன தீங்கு செய்தாலும் பொறுத்துப் பிரதி அபகாரஞ் செய்ய நினையாமல் அடங்கி, அபகாரஞ் செய்தவர்களுக்கும் உபகாரமே செய்வது அதனுடைய பெருந்தன்மையை வெளிப்படுத்துகிறது.

ஆனாலும் ‘எளியாரை வலியார் அடித்தால், அவ்வலியாரைத் தெய்வமடிக்கும்’ என்றபடி அந்தக் கொடியவர்களுக்கு வேறுவிதமாகத் தண்டனையுண்டாகுமேயொழிய உண்டாகாமற்போகாது.

இதற்குத் திருஷ்டாந்தமொன்று சொல்லுகிறோம். குதிரையினிடம் கருணையில்லாத கொடியனொருவன் ஒரு சமயத்தில் ஒரு பெரிய வண்டியில் தன் குதிரையைக் கட்டி அந்தக் குதிரைமேலேறி யுட்கார்ந்து வண்டியைச் செலுத்திக்கொண்டு போனான். போகும்பொழுது குதிரையை வேகமாகச் செலுத்தவேண்டுமென்று தன் காலிலுள்ள முள்வைத்த பாதரக்ஷையால் அதைக் குத்தியுதைக்க ஒரு காலைத் தூக்கினான். அப்படித் தூக்கும்பொழுது தான் உட்கார்ந்திருந்த சமநிலை தவறிக் கீழே வீழ்ந்துவிட்டான்; வண்டிச்சக்கரம் அவனது காலின்மேலோடிக் காலெலும்பு முறிந்துபோய்விட்டது; பிறகு பலமாத காலம் அவன் எழுந்திருக்கச் சத்தியில்லாமலே படுத்த படுக்கையாகக் கிடந்தான். அப்படிப் படுத்திருக்கையில் ‘தீமை விதைத்தால் தீமை விளையும்’ என்றபடி நாம் செய்த கொடுமையின் பயனே நமக்கு இப்படிப்பட்ட துன்பமாக வந்து விளைந்ததுபோலும் என்று அவன் அடிக்கடி எண்ணி மனவருத்தப்பட்டான். அக்கொடியவனுக்கு இதைவிட வேறு தண்டனையும் வேண்டுமோ? இப்படியே ஒரு யஜமானனிடத்தில் பல வருஷகாலம் ஊழியஞ்செய்துவந்த ஒரு வேலைக்காரன், யஜமானன் அப்பொழுது புதிதாக வாங்கின ஒரு குதிரையை வருத்தப்படுத்தினதற்காக, ஒரு மாதச் சம்பளம் பாக்கியுடனே வேலையிலிருந்து தள்ளிவிடப்பட்டான். இப்படிப்பட்ட தண்டனைகள் உடனுக்குடனே நேரிட்டால் கல்நெஞ்சராகிக் கொடுமைசெய்பவர்கள், நல்ல புத்தியுண்டாகி அன்புபாராட்டத் தொடங்குவார்களென்பதில் ஸந்தேஹமில்லை. இது தெரிந்து ஒரு பிரபு தமது வேலைக்காரர்கள் மற்ற விஷயங்களில் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும், குதிரைகள் விஷயத்தில் கொடியவர்களாயிருக்கக் கண்டால், உடனுக்குடனே அவர்களை வேலையினின்று நீக்கிவிடுவது வழக்கம். ‘அநேகர் குதிரைகளைச் சாதாரணமான ஒரு நாற்கால் ஜந்துவென்று எண்ணுகிறார்கள். குதிரைகள் செய்யும் அருமையான காரியங்களை ஆலோசித்துப்பார்த்தால், குதிரையைக் குதிரையென்று நினைக்கலாமோ? மனிதரிலும் மேம்பட்டதாகவன்றோ நினைக்கவேண்டும். நான் எப்பொழுதும் குதிரைகளுடன் ஸம்பாஷணை செய்துகொண்டிருப்பேன்; அப்படி யென்னோடு ஸம்பாஷணைசெய்வதில் அந்தக் குதிரைகளுக்கும்

விருப்பம் மிகவும் அதிகம்' என்று அந்தப் பிரபு தாமே சொல்லியிருக்கிறார்.

இப்படிப்பட்ட குதிரைகளை அன்பாகப் போற்றி வளர்த்து அதனால் உண்டாகும் பெரும்பயனைப் பெறுவதைவிட்டுப் பலர் பலவிதமாகத் துன்பப்படுத்திப் பாவம் தேடிக்கொள்ளுகிறார்கள். குதிரைகளுக்குக் கடவுள் அளித்திருக்கிற மிகவும் உபயோகமுள்ள அருமையான வால் மயிரையும் பிடரி மயிரையும் அறுத்து அநேகர் அக்கிரமம் செய்கிறார்கள். குதிரைகளுக்கு அவசியம் வேண்டுமென்று கடவுள் பிறவியிலேயே கொடுத்திருக்கிற வால் மயிரையும் பிடரி மயிரையும் கத்தரித்து அவலக்ஷணமாக்குகிறவர்கள் கடவுளைப்பார்க்கிலும் தாங்கள் அதிகமாகத் தெரிந்தவர்களென்று எண்ணினார்கள் போலும். அவர்களுக்குப் புத்தி வரும்படி செய்வதற்கு மற்றொரு உபாயமும் செய்யவேண்டாம்; கைகால்களைக் கட்டி அவர்களை ஈ, கொசு முதலியவை அதிகமாயிருக்குமிடத்தில் இரண்டொரு நாள் அடைத்துவைத்தால் அதுவே அவர்களுக்கு எற்ற தண்டனையாகுவதுமன்றி நல்ல புத்தியும் உண்டாகும்படி செய்யும்.

குதிரையென்பது லோஹத்தினாற் செய்த ஒரு யந்திரமன்று; நம்மைப்போலவே உணர்ச்சியும் விருப்பும் வெறுப்புமுள்ள பிராணியென்பதை யாவரும் நன்றாக ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். இந்த விஷயம் எவருடைய மனத்திலிருக்கிறதோ அவர்களே குதிரைகளை நன்றாகப் போஷித்து, அவற்றினிடம் வேண்டிய உதவிகளைப் பெற்றுச் சுகமடைவார்கள். சீராகக் காப்பாற்றப்படாத குதிரையானது சீராக நடத்தப்படாத பிள்ளைபோலவே உபயோகமற்றதாகிவிடும். உங்களுடைய யஜமானன் மிகவும் பெரிதான ஒரு பெட்டியைத் தூக்கும்படி உங்களுக்குக் கட்டளையிட்டதாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களாலானமட்டும் நீங்கள் பிரயாசப்பட்டுப் பார்த்தும் அதை யெடுக்க உங்களால் கூடாமற்போயிற்று. அதுகண்டு தான் சொன்னபடி அதை யெடுக்க உங்களுக்குச் சக்தியில்லையென்று யஜமானன் உங்களை யடிப்பானானால், நீங்கள் அவனைப்பற்றி யென்ன நினைப்பீர்கள்? இளைத்து மெலிந்த குதிரைகள் படுகிற பாடு அநேகமாய் இத்தன்மையானதுதானே.

குதிரையோட்டுகிறவர்கள் சிலருக்குச் சாட்டையைக் கையாளுவதுதவிர வேறொரு உபாயமும் தெரியாது. அது மிகப் பெரிய மடமையும் முரட்டுத்தனமுமாம். ஒரு ஜீவனை இம்சிப்பது மிருகங்களின் செய்கையேயன்றி மனிதர் செய்கையன்று. வாயில்லா ஜந்துக்களின் சுகதுக்கங்கள் தெரிந்து அதற்கேற்றபடி நடவாதவர்கள் அந்த ஜந்துக்களால் உண்டாகும் நன்மையை ஒருபொழுதும் பூரணமாய்ப் பெறமாட்டார்கள்.

## நாய்களுக்கு ஐம்புல வுணர்ச்சியுண்டா?

மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்புலன்களில், நாய்களுக்குக் காதும், கண்ணும் மிகக்கூர்மையானவை. ஆயினும் அவையெல்லாவற்றிலும் மிகவும் அற்புதமானது அவற்றின் மோப்பம். நாய்களுக்கு மோப்பம் மிகவும் சிறந்தது. அதனாலேதான் நாய்கள் கண்களையும், காதுகளையும்விட மோப்பத்தையே அதிகமாக நம்பி வேலை செய்கின்றன. சில ஜாதி நாய்களுக்கு இந்த வாஸனையறியும் குணம் மற்ற நாய்களைவிட மிகவும் ஆச்சரியமான விதமாய் அமைந்திருக்கின்றது. வேட்டை நாய்களுக்கு வாஸனையறியும் திறமை மிகவும் அதிசயமானதென்று சொல்லலாம். சிறந்த வேட்டை நாய் ஒன்றை நாம் வெளியே போகும்பொழுது கூடக் கூட்டிக்கொண்டு போவோமானால், அப்பொழுது இந்த நற்குணம் நமக்கு நன்றாக விளங்கும். அப்படி வெளியே போகும்பொழுது வேட்டை நாய்கள் மூக்கைத் தரையின் மேலேயே வைத்து எந்த மூலையில் என்ன இருக்கிறதென்று வாஸனை பார்த்துக்கொண்டே வெகு சந்தோஷமாகச் செல்வதைக் காணப் பேரானந்தமாயிருக்கும். பரிச வுணர்ச்சியும் உருசியறியும் திறமும் மற்றப் பிராணிகளைவிட நாய்களுக்குக் குறைந்தவையல்ல.

## நாய்களைப் பரிபாலிப்பதற்கு நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டிய விதிகள்.

நாய்களை வைத்துக்கொண்டிருப்பவர் ஒவ்வொருவரும் அவை சவுக்கியமாகவும் சந்தோஷமாகவுமிருப்பதற்கு வேண்டியவை யென்னென்ன உண்டோ, அவைகளை யெல்லாம் நன்றாய்த் தெரிந்துகொள்ள முயலவேண்டும். நாய்களுக்குத் தேகம் எப்பொழுதும் அழுக்கில்லாமல் சுத்தமாயிருக்கவேண்டும்; நாய்களுக்கு ஆரோக்கியமான உணவு வேண்டும்; சற்று நேரம் ஓடியுலாவவேண்டும். அவிழ்த்து வெளியே விடாமல் நாய்களை யெப்பொழுதும் வீட்டிலேயே கட்டிப்போட்டு வைப்பது பெரிய கொடுமையாம். தினந்தோறும் இரண்டொருமணி நேரமாவது வெளியே போய் ஓடியுலாவிவரச் செய்வது மிகவும் அவசியம். இந்தக் காரியம் செய்ய எவனுக்குத் திறமையில்லையோ, அவன் நாய்களை வைத்து வளர்க்காமலிருப்பதே மேலான காரியமாம். நாய்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டுவேளை நல்ல உணவு கொடுப்பதும், குடிக்க நல்ல தண்ணீர் அளிப்பதும், சற்று வெளியே கொண்டுபோவதும் எவர்க்கும் அஸாத்தியமான காரியமல்லவே.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1903.